# பள்ளிக்கல்வித் துறை - விழுப்புரம் மாவட்டம்

## காலாண்டுப் பொதுத்தேர்வு 2024-25

## பொதுத்தமிழ்- விடைக்குறிப்பு

### பகுதி- 1

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14x1 =14

| | | |
|---|---|---|
| 1 | *இ ) வடமொழி* | 1 |
| 2 | *அ ) 4* | 1 |
| 3 | *இ ) தொல்காப்பியம்* | 1 |
| 4 | *இ ) இசைக்கருவி* | 1 |
| 5 | *ஆ ) உயர்திணை , அஃறிணை* | 1 |
| 6 | *ஈ ) மழைத்துளிகள்* | 1 |
| 7 | *ஆ ) இராமன், சுக்ரீவன்* | 1 |
| 8 | *ஆ ) கணிதம்* | 1 |
| 9 | *ஈ ) அ,ஆ,இ அனைத்தும்* | 1 |
| 10 | *ஈ ) 103* | 1 |
| 11 | *இ ) காட்சி* | 1 |
| 12 | *அ ) உரிச்சொற்றொடர், இசைநிறை அளபெடை* | 1 |
| 13 | *இ ) 4123* | 1 |
| 14 | *அ ) குறுந்தொகை* | 1 |

www.Padasalai.Net

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x2 =6

| | | |
|---|---|---|
| 15 | மாலையில் சூரியன் மறையும்போது, வானம் சிவந்து பூக்காடாய்க் காட்சியளிக்கும். உழைக்கும் தொழிலாளர்களின் கைகள் சிவந்திருக்கும். தொழிலாளர்களின் தோள்மீது வியர்வை துளிகள் முத்துமுத்தாய் வீற்றிருக்கும். | 2 |
| 16 | குரங்குகள் குளிரால் நடுங்கின, விலங்குகள் மேய்ச்சலை மறந்தன, பறவைகள் மரத்தில் இருந்து கீழே விழுந்தன, பசுக்கள் கன்றுகளைத் தவிர்த்தன. | 2 |
| 17 | வசனம்- எதுகை மோனை இல்லாமல் அடி அளவு இல்லாமல் எழுதப்படுவது<br>கவிதை- எதுகை மோனையுடன் அடி அளவுடன் யாப்பில் வந்தடங்கும் வார்த்தைகள். | 2 |
| 18 | பரதவ மக்களின் மீன் பிடிக்கும் கடல் பெரியது எனினும் அவர்களின் வாழ்விடம் சிறுகுடி ஆகும்.<br>முரண் நயம் : சிறுகுடி x பெருங்கடல் | 2 |

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. . 2x2 =4

| | | |
|---|---|---|
| 19 | மரம் நமக்கு மழை தருகிறது.<br>சுவாசிக்க காற்றினைத் தருகிறது.<br>மண்ணரிப்பினைத் தடுக்கிறது.<br>எனவே ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளில் ஒரு மரத்தையாவது வளர்க்க வேண்டும்.<br>**( ஏற்ற விடை எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 20 | தமிழில் நிகண்டு நன்னூல் காரிகை தண்டியலங்காரம் நீதி நூல்கள்<br>கணிதத்தில் கீழ்வாய்இலக்கம் மேல்வாய் இலக்கம் குழிமாற்று.<br>**( ஏற்ற விடை எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| 21 | காலின்மெக்கன்சியின் சேகரிப்புகளைக் கொண்டு 1869ல் உருவாக்கப்பட்டது<br>அரிய ஓலைச்சுவடிகள் தாள் சுவடிகள் அச்சு புத்தகங்கள் இதில் உள்ளன. | 2 |

பிரிவு – 3

*எவையேனும் ஏழனுக்கு விடை தருக ;* 7x2 =14

| | | |
|---|---|---|
| 22 | உவமை தொடரை சொற்றொடரில் அமைத்து எழுதுக:<br>கிணற்றுத் தவளை போல- இந்தக் காலத்தில் கணினி அறிவு இல்லாமல் இருப்பது கிணற்றுத் தவளை போல வாழ்வதற்கு சமமானது.<br>(அல்லது)<br>அச்சாணி இல்லாத தேர் போல - தலைவன் இல்லாத குடும்பம் அச்சாணி இல்லாத தேர் போல முன்னேறாது.<br>**( பொருத்தமான விடை எழுதி இருப்பின் முழு மதிப்பின் தரலாம்**) | 2 |
| 23 | மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:<br>விலை விளை விழை - விளைச்சலுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என விழைந்தேன்.<br>( அல்லது)<br>தலை தளை தழை - ஆட்டிற்குத் தழையை உடைத்து கயிறால் தளைத்து தலை மீது தூக்கி வந்தேன்.<br>**( பொருத்தமான விடை எழுதி இருப்பின் முழு மதிப்பின் தரலாம்**) | 2 |
| 24 | **. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக :**<br>மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்பு கொள்ள வேண்டும் தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். | 2 |
| 25 | **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**<br>தாமரை- நமது தேசிய மலர் தாமரை ஆகும்.<br>தா மரை - காட்டில் தா(வும்) மரையைக் கண்டேன்<br>**(அல்லது)**<br>வெங்காயம் - வெங்காயத்தின் விலை கூடிவிட்டது. | 2 |

| | | |
|---|---|---|
| | வெம் காயம் - விபத்தில் நண்பனுக்கு வெம் காயம் ஏற்பட்டது.<br><br>**( பொருத்தமான விடை எழுதி இருப்பின் முழு மதிப்பின் தரலாம் )** | |
| 26 | **பகுபத உறுப்பிலக்கணம்:**<br>பொலிந்தான் – பொலி+த்(ந்) + த்+ ஆன்<br>பொலி- பகுதி<br>த்- சந்தி , ந் ஆனது விகாரம்<br>த் - இறந்த கால இடைநிலை<br>ஆன்- ஆண்பால் வினைமுற்று விகுதி<br>**(அல்லது)**<br>பேசுவார் - பேசு+வ்+ஆர்<br>பேசு - பகுதி<br>வ் - எதிர்கால இடைநிலை<br>ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி | 1+1 |
| 27 | **புணர்ச்சி விதி:**<br>பூம்பாவாய் – பூ+ பாவாய்<br>விதி 1: பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும்<br>**(அல்லது )**<br>தனியாழி - தனி + ஆழி<br>விதி 1: இ ஈ ஐ வழி யவ்வும்<br>விதி 2: உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | 1+1 |
| 28 | திருவளர் செல்வன் என்பதே சரியான தொடர்.<br>வினைத்தொகையில் ஒற்று மிகாது. | 2 |
| 29 | **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**<br>அ) நிலத்தை உழவேண்டும். அப்பொழுதுதான் வயிறு நிறையும்.<br>ஆ) பிள்ளைக்கு உடல்நிலை சரியில்லை. மூன்று நாட்களாக சிரமப்படுகிறது. | 2 |
| 30 | வெண்பாவிற்கு உரிய தளைகள் இரண்டு .<br>அவை இயற்சீர் வெண்டளை , வெண்சீர் வெண்டளை | 2 |

www.Padasalai.Net

பகுதி -III

பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4 =8

| | | |
|---|---|---|
| 31 | இடம்: தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலாக இடம்பெற்றுள்ளது. | 1 |
| | பொருள்: கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது சூரியன் | 1 |
| | விளக்கம்: கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது சூரியன். மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவது தன்னிகரில்லாத தமிழ். | 2 |
| 32 | தான் ஓர் உதவியும் செய்யாமல் ஒருவர் தமக்கு செய்த உதவியானது. விண்ணையும் மண்ணையும் விட உயர்ந்தது<br><br>உரிய காலத்தில் ஒருவருக்குச் செய்த உதவி சிறியதாக இருந்தாலும், இந்த உலகத்தைவிட மிகப் பெரியது.<br>இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் செய்த உதவி, கடலைவிடப் பெரியது. | 4 |
| 33 | கவிஞரின் எண்ணம். அதை வெளிப்படுத்தும் வண்ணம், வாசகனின் மனநிலை ஆகிய மூன்றும் மூன்றான காலம்போல் ஒன்று.<br>இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றும் ஒருவருடைய வாழ்வு காலத்தைக் குறிப்பிடுகையில் ஒன்றாகிறது.<br>அதுபோல, கவிஞரின் எண்ணம். அதை வெளிப்படுத்தும் வண்ணம். வாசகனின் மனநிலை ஆகிய மூன்றும் 'கவிதை' என்ற நிலையில் ஒன்றாகிறது. | 4 |
| 34 | இளம் பெண்கள் ஆரவாரத்துடன் கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளை உடையது திருமயிலை ஆகும்.<br>திருமயிலை கபாலீச்சரம் கோவிலில் எழுந்து அருளியிருக்கும் இறைவனுக்குப் பூசையிடப்படும்<br>எழுச்சி மிகுந்த விழாவே பங்குனி உத்திரப் பெருவிழா ஆகும்.<br>திசைகள் தோறும் பூசையிடும் விழா எனவும்,<br>பல்லியங்களும், இன்ன பிற கருவிகளும் சேர்ந்து இசைத்துப் பெரும் ஒலி எழுப்பும் ஆரவார விழா ஆகும். | 4 |

www.Padasalai.Net

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4 =8

| | | |
|---|---|---|
| 35 | எந்தத் தொன்மையான மொழியும் சமிக்கையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது.<br><br>இசையோடும் இசைக்கருவியோடும்தான் கவிதை பிறக்கிறது.<br><br>ஓசையும் பொருளும் இணைந்த கவிதை கலைவடிவம் கொள்கிறது.<br><br>இதனையே அந்தக் கவிதையின் ஒலிப்பின்னல் (ஒலிக்கோலம்) என்கிறோம்.<br><br>இப்பண்பைச் சங்கப் பாடல்கள் பலவற்றில் காணலாம்.<br><br>வல்லின மெய்கள் மிகுந்து வருதல், நெடில் ஓசை வருதல், வந்த சொல்லே மீண்டும் மீண்டும்<br>வருதல் | 4 |
| 36 | நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23-ஆம் நாள் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைந்தது.<br><br>புயல், வெள்ளம், நிலநடுக்கம் வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீவிபத்து சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகின்றது .<br><br>மாநிலம், மாவட்டம். ஊராட்சி. சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைந்துள்ளன. | 4 |
| 37 | பழங்காலத்தில், பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகினார்கள்.<br><br>ஆசிரியர் முதலில் தரையில் எழுத, அதன்மேல் பிள்ளைகள் சொல்லியபடி எழுதினர்.<br><br>பனையோலை, தாழைமடல் போன்றவற்றை ஆசிரியரே ஒழுங்குசெய்து கொடுப்பதுண்டு.<br><br>மாணவர்கள் மடக்கெழுத்தணி, வாரெழுந்தாணி, குண்டெழுத்தாணி ஆகிய எழுத்தாணி<br>பயன்படுத்திச் சுவடிகளில் எழுதினர். | 4 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | தற்காலத்தில், காகிதத் தாள்களும் பலவண்ண எழுதுகோல்களும் எழுதுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.<br>(**பொருத்தமான விடை எழுதி இருப்பின் முழு மதிப்பின் தரலாம்**) | |
| 38 | சுவடிகளிலுள்ள எழுத்துக்கள் செவ்வனே தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச்சாறு அல்லது ஊமத்தையிலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றைக் கூட்டிச் செய்த மையை அதில் தடவுவார்கள். அந்த மை எழுத்துக்களை விளக்கமாகக் காட்டுவதோடு கண்ணுக்கும் குளிர்ச்சியைத் தரும்.<br>இங்ஙனம் மை தடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதனால் அக்ஷராப்பியாசத்தை 'மையாடல் விழா' என்று அழைப்பர். | 4 |

பிரிவு- 3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4 =12

| | | |
|---|---|---|
| 39 | இலக்கிய நயம் பாராட்டுக.<br><br>மையக்கருத்து: பிறப்பினால் ஒருவருக்குப் பெருமைவாராது. அவர் செய்யும் நற்செயல்களால் மட்டுமே பெருமை வரும்.<br><br>மோனை: முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.<br>(எ.கா)<br>நன்மை<br>நாடும்<br>தின்மை<br>தீண்ட<br>எதுகை இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.<br>(எ.கா)<br>பிறப்பினால்<br>சிறப்பு<br>நன்மை<br>தின்மை<br>இயைபு: பாடலில் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றி வருவது இயைபு<br><br>. (எ.கா)<br>வாராதப்பா | 4 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | வேண்டுமப்பா<br>மேற்குலத்தார்<br>ஒண்ணாதார்<br>அணி:<br>இப்பாடலில் அப்பா என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தந்ததால், இதில் சொற்பொருள் பின்வருநிலையணி வந்துள்ளது.<br><br>சுவை<br><br>இப்பாடலில் சாதிக் கொடுமையைச் சாடிப் பாடியுள்ளதால் 'வெகுளிச்சுவை' பயின்று வந்துள்ளது.<br><br>(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்கள் எழுதியிருப்பின் உரிய மதிப்பெண் வழங்கலாம். | |
| 40. | அ) நிரல் நிறை அணி<br><br>அணி விளக்கம்<br>சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே பொருள் கொள்ளச் செய்வது நிரல்நிறை அணி.<br>சான்று<br>அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது.<br><br>பொருத்தம்<br>அன்பும் அறனும் உடைய இல்வாழ்க்கை, பண்புடையதாகவும் பயன் மிக்கதாகவும் அமையும் என வரிசை முறைப்படி பொருள் கொள்ளப்படுவதால், இது நிரல்நிறை அணி ஆயிற்று.<br><br>(அல்லது)<br><br>ஆ) ஏகதேச உருவக அணி<br><br>அணி விளக்கம்:<br>ஒரு பொருளை உருவகம் செய்து, அதற்கு இணையான மற்றொரு பொருளை உருவகம் செய்யாது விட்டுவிடுவது ஏகதேச உருவக அணி.<br>சான்று:<br>சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும் ஏமப் புணையைச் சுடும். | 2<br><br>1<br><br>1<br><br>2<br><br>1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | அணிப் பொருத்தம்:<br>இங்கு சுற்றத்தை மட்டும் தெப்பமாக உருவகப்படுத்தி விட்டு சினத்தை உருவகப்படுத்தவில்லை எனவே இது ஏகதேச உருவக அணி ஆகும். | 1<br><br>1 |
| 41 | குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.<br><br>பழமொழி விளக்கம்<br>பிறருடைய குற்றம் குறைகளையே நோக்கிக்கொண்டிருந்தால், நமக்கு உறவினர்களே இருக்க மாட்டார்கள்.ஆம், நன்றல்லதை அன்றே மறப்பது நன்று.<br>அல்லது<br>கூடி வாழ்ந்தால் கோடி நன்மை<br><br>பழமொழி விளக்கம்<br>நாம் ஒற்றுமையோடு கூடி வாழ்ந்திருந்தால் அதனால் பல்வேறு நன்மைகள் வாழ்வில் உண்டாகும். ( பழமொழி விளக்கம் 1 மதிப்பெண், வாழ்க்கை நிகழ்வு 3 மதிப்பெண்) | 4 |
| 42 | .1.இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை பிறழாது பா அமைய வேண்டும்.<br>2.ஈற்றடி முச்சீராகவும் ஏனையவை நாற்சீராகவும் இருக்கும்.<br>3.ஈரசைச்சீர்கள் மாச்சீரும் விளச்சீரும் மூவசைச்சீரில் காய்ச்சீரும் வரும்.<br>4. ஈற்றுச்சீர் நாள்,மலர்,காசு, பிறப்பு ஆகிய வாய்பாடுகளுள் ஒன்றைக்கொண்டு முடியும்.<br>5. வெண்பாக்கள் குறள்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசைச் சிந்தியல்வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா, கலிவெண்பா என எழுவகைப்படும். | 4 |
| 43 | கருத்து படத்தை புரிந்து கொண்டு பத்தியாக எழுதி இருப்பின் உரிய மதிப்பெண் தருக. | 4 |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பகுதி - IV 3x6=18

| | | |
|---|---|---|
| 44 | அ)<br>செம்மைமிகு சூரியன் மாலையில் மலைமுகட்டில் மறையும் போது வானம் எனும் காடு பூக்காடாய்க் காட்சி தருகிறது.<br><br>உழைப்பாளர்களின் கைகள் சிவந்து திரண்ட தோள்களில் வியர்வைத் துளிகள் முத்து முத்தாய்க் காணப்படுகிறது.<br><br>இக்காட்சியெல்லாம் நான் வியந்து பாட அன்னைத் தமிழே உன் துணை வேண்டும்.<br><br>பெருகி வரும் கவிதைகளுக்கு உணவாக இருக்கும் தமிழே! தமிழே நீ! பாண்டியனின் தமிழ்ச் சங்கத்தில் தவழ்ந்திருந்தாய்.<br><br>பாரி முதலான வள்ளல்கள் எழுவரை இம்மண்ணுக்குத் தந்தாய்.<br><br>உன் பழமையான நலன்களை எல்லாம் புதுப்பித்து, தமிழ்க்குயிலே நீ மெய்சிலிர்க்கப் பாடி வா.<br>கூண்டினை உடைத்தெறிந்து வெளிவரும் சிங்கம் போல் வா.<br><br>குளிர் பொதிகையில் தோன்றிய தென் தமிழே சீறி வா என்று சிற்பி தமிழின் சீரிளமையைத் திறம் வியந்து பாடுகிறார். | 6 |
| | (அல்லது)<br>ஆ)<br>இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலை<br>**குகனுடன் உறவு இராமன்,**<br>வேடுவர் தலைவனான குகனைத் தன் உடன்பிறப்பாக ஏற்றுக்கொள்கிறான்.<br>**சடாயுவுடன் உறவு**<br>இராமன், தன் தந்தையின் நண்பனான சடாயுவைத் தன் தந்தையாகவே கருதி இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.<br>**சவரிவுடன் உறவு**<br>தன்னையே நினைத்துத் தவமிருந்த சவரியிடம், இவ்வளவு காலம் நீ துன் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா? என்று பரிவுடன் கேட்டான்.<br>**சுக்ரீவனுடன் உறவு**<br>உன் உறவினர் என் உறவினர். அன்பு மிகுந்த என் சுற்றத்தினர் உன் சுற்றத்தின நீ என் இனிய உயிர் நண்பன் என்றான்.<br>**வீடணனுடன் உறவு**<br>நாங்கள் நால்வர் உடன்பிறந்தவர்களாக இருந்தோம்.<br>பின், வேடுவர் தலைவனான குகனுடன் சேர்த்து நாங்கள் ஐவர் ஆனோம்.கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் அறுவர் ஆனோம்.<br><br>உள்ளத்தில் அன்புகொண்டு எங்களிடம் வந்த அன்பனே, உன்னுடன் சேர்த் எழுவர் ஆனோம். | 6 |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | இவ்வாறு வேடன், பறவை, முதியவள், வானரம், எதிரியின் தம்பி என அனைத் உயிர்களிடத்திலும் அன்பு கொண்டிருந்த இராமன், பண்பின் படிமமாக திகழ்கிறான். | |
| 45 | அ)<br><br>சங்க இலக்கியத்தில் குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது என்பதைப் பற்றி காண்போம்.<br><br>குடும்ப அமைப்பு:<br><br>குடும்பம் தொடங்கிக் குலம் , கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்பு வரை விரிவு பெறுகிறது. எனவே குடும்பமே அடிப்படை அலகாக உள்ளது. இவ்வமைப்பு ஏற்பட திருமணமே மூலமாக உள்ளது.<br><br>திருமணமும் குடும்பமும்:<br><br>நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல் திருமணமும் குடும்பமும் ஒன்றையொன்று சார்ந்தே அ மைந்திருக்கிறது. திருமணம் , குடும்பம் ஆகிய இரண்டு சொற்களும் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இடம்பெறவில்லை . குடும்பம் என்ற சொல் முதன் முதலில் திருக்குறளில் (1026) தான் பயின்று வருகிறது.<br><br>சங்க இலக்கியத்தில் குடும்பம்:<br><br>சங்க இலக்கியத்தில் குடும்பம் என்ற சொல் வேறு பெயர்களில் பயின்று வருகிறது, அவை குடும்பு, குடம்பை, கடும்பு ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை. குடம்பை என்னும் சொல் இருபது இடங்களிலும் ; 'குடும்பு' என்ற சொல்லுக்கு "கூடி வாழ்தல்" என்று பொருள்படுகிறது.<br><br>வாழ்விடம்:<br><br>இல், மனை , குரம்பை ,புலப்பில், முன்றில், குடில், கூரை , வரைப்பு, முற்றம் , நகர், மாடம் முதலிய சொற்கள் வாழ்விடங்கள் உள்ள வேற்றுமையை எடுத்துரைக்கிறது. புக்கில் மற்றும் தன்மனை குறிப்புகளும் காணப்படுகின்றன.<br><br>குடும்பங்களின் வகைகள்:<br><br>மணந்தகத்தில் தொடங்கிய குடும்ப அமைப்பு தாய் வழி குடும்பம், தந்தை வழி குடும்பம், தனிக்குடும்பம் மற்றும் விரிந்த குடும்பம் வரை மாறி இருக்கிறது.<br><br>சங்க இலக்கியத்தின் தொடர்ச்சியாக இன்றைய சமூகமும் தனி குடும்பம், கூட்டு குடும்பம் மற்றும் தந்தை வழி சமுகமாக அமைந்துள்ளது. தொன்மை மிக்க இக் குடும்ப அமைப்பு முறை தமிழ் சமுதாயத்தின் அடையாள பெருமிதமாகும். | 6 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | (அல்லது)<br>ஆ) சென்னை மாநகரின் பண்பாட்டு அடையாளங்கள்<br><br>இந்திய சாரசனிக் கட்டடக் கலைப்பாணியில் கட்டப்பட்ட எழும்பூர் தொடர்வண்டி நிலையம்.<br><br>தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை அறிய உதவும் தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.<br><br>தென்னிந்திய வரலாற்றை அறிய உதவும் எழும்பூர் அருங்காட்சியகம்.<br><br>இந்தியாவின் முதல் பொது நூலகமான கன்னிமாரா நூலகம்.<br><br>தென்னிந்திய திரைப்படத் துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய கோடம்பாக்கம் ஆகியவை சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாக இன்றும் நிலைத்திருக்கின்றன.<br><br>சென்னை நகரின் போக்குவரத்து<br>சென்னையில், ஆங்கிலேயர்களின் குடியிருப்புகள் உருவானபோது மக்கள் நடந்து சென்ற பாதைகளும், மாட்டுவண்டிப் பாதைகளும் சாலைகளாக மாறின.<br><br>தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.<br><br>அதனைத் தொடர்ந்து மத்திய தொடர்வண்டி நிலையமும், எழும்பூர் தொடர்வண்டி நிலையமும் உருவாயின.<br><br>சென்னை நகர வீதிகளில் டிராம் வண்டிகள் இயக்கப்பட்டன.<br><br>சென்னைத் துறைமுகம், பன்னாட்டு விமான நிலையமும் உருவாக்கப்பட்டன. | 6 |
| 46 | அ) மருதனின் பண்புநலன்கள்<br><br>தலைப்பு, முன்னுரை, முடிவுரை.<br><br>கதையின் வாயிலாக மருதனின் பண்புநலன்களை விளக்குதல்.<br>(அல்லது)<br><br>ஆ) சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு<br><br>சாலை விபத்தினால் ஏற்படும் ஆபத்துகள் மற்றும் உயிர் சேதங்கள்<br><br>சாலையைச் சரியாக பயன்படுத்துதல்.<br><br>சாலை விபத்துகளுக்கான காரணங்கள்.<br><br>வாகனம் ஒட்டுபவர்களிடம் காணப்படும் குறைபாடு. | 2<br><br>4<br><br>6 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | மக்களிடம் விழிப்புணர்வு இல்லாதது.<br><br>(சாலை விபத்துக் குறித்து ஏதேனும் 6 கருத்துகள் விரிவாக எழுதியிருப்பின் உரிய மதிப்பெண்<br><br>வழங்கலாம்) | |

*பகுதி- V*

*மனப்பாடப் பகுதி* *4+2 = 6*

| | | |
|---|---|---|
| 47. அ | விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற<br>வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;<br>மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்<br>மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;<br>புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;<br>புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்<br>கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்<br>கவிநடையும் உரைநடையும் வேறு வேறு. | 4 |
| ஆ | நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது<br>அன்றே மறப்பது நன்று | 2 |

www.Padasalai.Net